# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 095/ந/2018

ஆணை எண். 113/2018

நாள் : 02/05/2018

திரு வீ. கண்ணையன்,
பட்டுக்கோட்டை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
பட்டுக்கோட்டை நகராட்சி. – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, காட்டு நாயக்கன் காலனி, 31/11, நாடி அம்மன் கோவில் சாலை முகவரியில் வசிக்கும் திரு வீ. கண்ணையன் அவர்களின் 26.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 095/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, காட்டு நாயக்கன் காலனி, 31/11, நாடி அம்மன் கோவில் சாலை முகவரியில் வசிக்கும் திரு வீ. கண்ணையன் என்பவர், தான் பட்டுக்கோட்டை நகராட்சியில் துப்பரவுப் பணியாளராகப் பணியாற்றி 30.06.2017 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றதாகவும், தனக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வூதியப் பலன்களை விரைவில் வழங்கிட ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்ற துப்பரவுப் பணியாளர். தனது மகளின் உயிர்காக்கும் இருதய சிகிச்சை மற்றும் மருத்துவச் செலவிற்கு அவரது ஓய்வூதியத் தொகை மற்றும் பிற பணிக்கொடைகளையே பெரிதும் நம்பியுள்ளாரென தெரிவித்துள்ளார். மனுதாரர் ஓய்வு பெற்று ஓராண்டு முடியும் நிலையில் உள்ளது. ஓய்வு கால பயன்கள் குறித்து பிரேரணைகள் நகராட்சி துறையினரால் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு 3.10.2017–இல் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் கோரிக்கைக் குறித்து தனிக்கவனம் செலுத்தி

ஓய்வூதியப் பலன்கள் விரைந்து கிடைத்திட தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 2–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   பட்டுக்கோட்டை நகராட்சி,
   பட்டுக்கோட்டை,
   தஞ்சாவூர் மாவட்டம்.

2. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரகம்,
   சைதாப்பேட்டை, சென்னை 35.

3. திரு வீ. கண்ணையன்,
   31/11, நாடியம்மன் கோயில் ரோடு,
   காட்டு நாயக்கன் காலனி,
   பட்டுக்கோட்டை,
   தஞ்சாவூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்